# 3

# சேற்றிலிருந்து தூக்கினார்



*அழிவின் குழியிலிருந்து என்னை அவர் வெளிக்கொணர்ந்தார். சேறு நிறைந்த பள்ளத்தினின்று தூக்கியெடுத்தார் (திபா 40 : 2)*

(நான்சி கேத்ரின் - Worshipper, சென்னை)

## *என் குடும்ப நிலை*

என் பெற்றோருக்கு நாங்கள் 3 பெண் குழந்தைகள். திருமணவயதில் இருந்த என் மூத்த சகோதரி, திடீரென்று, "ஒரு இந்து சமயத்தை சார்ந்தவரையே திருமணம் செய்துகொள்வேன்" என்று சொன்னபோது வீட்டில் மிகப்பெரிய போராட்டம் வெடித்து, ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டி, வீடு நரகம் போல இருந்தது. அதன்பிறகு என் பெற்றோர் சமாதானமாகி, அந்த இந்து மணமகனுக்கே திருமணம் செய்து வைத்தார்கள். என் இரண்டாவது சகோதரிக்கு, என் பெற்றோர் மிகவும் ஆசையோடு, ஒரு கிறிஸ்தவ மணமகனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். ஆனால் அவர்களுக்கிடையேயும் சமாதானம் இல்லாமல், எங்களோடும் பிரச்சனை ஏற்பட்டதால், அவர்களின் வீட்டிற்கே நாங்கள் செல்ல முடியாத நிலை உருவானது. அந்நேரத்தில் என்னைக் கவனிக்கப் பெற்றோருக்கு நேரமில்லை; எனவே தனிமையே எனக்குத் துணையானது.

## வேலை இல்லாத நிலை

இந்நிலையில் 2011ல், நான் பொறியியல் (ECE) படிப்பில் (85%) தேர்ச்சியடைந்ததால், வேலையில் சேர்ந்து சம்பாதிக்கலாம் என்று வேலைதேட ஆரம்பித்தேன். Campus Interview, Job fare, Off campus போன்றவற்றில் கலந்துகொண்டாலும் எந்தப்பயனும் இல்லை. எதிலும் நான் தேர்வு செய்யப்படவில்லை. அதுவும் திறனாய்வுச் சுற்றில் மிகக் குறைந்த மதிப்பெண்களையே பெற்றேன். அந்த அளவுதான், IQ எனக்கு இருந்தது. இந்நிலையில் தனியாக ஒரு சிறப்புக்கல்வி (special course) முடித்தால், வேலை கிடைக்கும் என தோழிகள் சொன்னதை நம்பி, ரூ.40,000/- செலுத்தி 6 மாதகாலப் படிப்பை முடித்தேன். ஆனால் அந்தப் படிப்பினாலும், எந்தப் பயனும் இல்லாமல் போயிற்று. தினமும் சுமார் 20 வேலைக்கான விண்ணப்பங்களை எடுத்துக் கொண்டு, சென்னையில் உள்ள பல நிறுவனங்களில், கொடுத்துவிட்டு வருவேன். அந்நிறுவனத்திலிருந்து வரும் அழைப்பிற்காக நம்பிக்கையோடு காத்திருந்தேன். என்னோடு வேலை தேடிய பலருக்கும் வேலை கிடைத்தபோது, நான் மட்டும் தனியாக விரக்தியோடு வீட்டிலிருந்தேன். நல்ல மதிப்பெண்கள் பெற்றும், வேலை கிடைக்காமல் இருந்த நாட்கள் முட்களின் மீது நடந்ததைப் போலிருந்தது.

## கடவுளை நோக்கி

ஒரு வருடம் வேலை இல்லாமல், வீட்டிலேயே தனிமையில் கவலையோடு இருந்தேன். ஒருநாள் மிகுந்த கண்ணீரோடு “என் எதிர்காலம் எப்படி இருக்கும்? நான் எதற்கும் தகுதியற்றவளா?” என்று கடவுளை நோக்கி அழ ஆரம்பித்தேன். ஞாயிறுத் திருப்பலிக்குச் செல்பவளாக மட்டும் இருந்த என்னை, இந்த சோகமான நாட்களே கடவுள் பக்கம் இழுத்துச் சென்றன. அப்பொழுதுதான் இயேசுகிறிஸ்து, மிரபெல்லா ஊழியத்தின் வழியாக என்னை சந்திக்க வந்தார்.

என் தாயும், சகோதரி கரோலினும் தோழிகள். மேலும் என் சித்தி மகளுக்கு (ஜெனி டாலியா-Chapter-4) ஏற்பட்ட அற்புதத்தைக் கேட்டு என் தாயின் உறவினர்கள் பலரும் 2011ம் ஆண்டு மேமாதம் மதுரையில் மிரபெல்லாவில் நடைபெற்ற ஆவியானவர் பெருவிழாவிற்குச் சென்றனர். ஆனால் நானோ, சென்னையில் வேலை தேடுவதில் தீவிரமாக இருந்தேன். அவர்களுள் பலர் ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றதாகக் கூறிய அனுபவங்கள் எனக்கு முற்றிலும் புதிதாயிருந்தது! கடவுள் எங்கோ இருப்பவர், கேட்டதைக் கொடுப்பார், அவருக்கு மனிதனை பார்க்கவேண்டும் என என்ன தேவையுள்ளது? ஆண்டவரைப் பார்ப்பதெல்லாம் சாத்தியமா? அப்படி உண்மையானால் எனக்கும் ஆவியானவரின் அபிஷேகம் கிடைக்குமா? என பல கேள்விகளோடு இருந்தேன்.

மற்றவர்களுக்கு கிடைத்த அனுபவங்களைக் கேள்விப் பட்டு, 2011ம் ஆண்டு ஜூன் மாதம் மிரபெல்லா நற்செய்திக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். கடவுள் என்னிடம் பேசுவார் என்ற எந்த நம்பிக்கையுமின்றி, ஜெபக்கூட்டத்தில் என்ன நடக்கும் என்பதை வேடிக்கை பார்ப்பதற்காக மட்டும் கலந்து கொண்டேன்.

## *மீட்கப்பட்ட அனுபவம்*

ஜெபவேளையில் கண்களை மூடச்சொன்னபோது, எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் கண்களை மூடியபோது, நான் ஒரு கடுமையான அந்தகார இருள் சூழ்ந்த இடத்திற்குள் இழுத்து செல்லப்படுவதைப்போல உணர்ந்தேன். அது எவ்வளவு பயங்கரமாக இருந்தது என்றால், கண்ணுக்கு எதுவுமே புலப்படாத ஒரு காரிருளுக்குள், தலைகீழாக நான் விழுந்துகொண்டே இருந்தேன். இதன் முடிவு என்ன என்று நினைக்கும்போது எனக்கு பயம் இன்னும் அதிகமாகி, யாராவது என்னைக் காப்பாற்றுங் களேன்!! என்று கத்தவேண்டும் போல் இருந்தது. அப்போது **"இயேசுவே"** என்று உள்ளத்தின் ஆழத்திலிருந்து கத்தியபோது, ஆணி பாய்ந்த, ஒளிமயமான இயேசுவின் கரம், இருள் நிறைந்த